## நாகொட பிரதேச சபை
## காலி மாவட்டம்

----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நாகொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்தில் செலுத்த வேண்டிய ரூபா 2,564,721 தொகை எனினும் அதனை ரூபா 2,513,655 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலுத்தவேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்வதற்கு வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் முறையே ரூபா 310,330 தொகை மற்றும் ரூபா 200,250 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 12,199,562 தொகை மற்றும் ரூபா 451,526 தொகை என காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2008 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 18,315 தொகைக்கான தொங்கல் கணக்கு செலவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| (i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,497,319 ற்கான நிலுவை சந்தை வாடகை மீதியில் காணப்பட்ட முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 1,619,068 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்படும் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்பட்ட பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 12,199,561 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்படும் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) பல வருட காலம் முதல் காணப்படும் கூட்டுப்பெறுமதி ரூபா 8,450,668 தொகைக்கான 04 கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளிலிருந்து வரக்கூடிய மீதிகளை தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2011 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பான கூட்டுப்பெறுமதி ரூபா 977,611 தொகை செலுத்த வேண்டிய அரசாங்க உதவியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளிலிருந்து வரக்கூடிய மீதிகளை தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 405,000 தொகைக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி<br>விதி 217 மற்றும் 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், பீ.எஸ்.46 இலக்கங் கொண்ட படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கியிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 76,985 தொகை பெறுமதியான 39 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன்படி நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 3.1 | சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 5.1 | சபைக்குச் சொந்தமன வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,297,138 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,936,110 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 786,500 | 890,263 | 830,525 | 396,124 | 64,000 | 65,812 | 4,093 | 336,386 |
| வாடகை | 5,049,600 | 4,472,950 | 3,969,650 | 3,037,269 | 3,498,380 | 3,531,600 | 2,823,783 | 2,533,969 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 518,600 | 271,030 | 118,598 | 274,882 | 450,000 | 1,028,522 | 906,072 | 122,450 |
| | 6,354,700 | 5,634,243 | 4,918,773 | 3,708,275 | 4,012,380 | 4,625,934 | 3,733,948 | 2,992,805 |

### 2.2.2 வீதவரி மற்றும் ஏக்கர் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் வீதவரி வலயங்கள் வெளியிடப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கும் பிரதேசத்தில் கணிப்பீடொன்றின் மூலம் ஏக்கர் வரி அறவீடு செய்யப்பட வேண்டிய தரப்பினரை சரியாக இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டின் போது 38 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றின் 04 செயற்திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. | சபையின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படக் கூடிய விதத்தில் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட காலத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | நீண்ட காலத் திட்டம் ஒன்று காணப்படுகின்றது. இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான குப்பை முகாமைத்துவத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குப்பை அகற்றுவதற்காக முறையான மற்றும் நீண்ட காலத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். | காணி ஒன்று உரித்தாக்கி குப்பை முகாமைத்துவத்தை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

(ஈ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 2019 ஆண்டின் நெறிமுறை அடிப்படை அபிவிருத்தி மானியத்தின் கீழ் உடுகம உக்ஒவிட முன்பள்ளி அபிவிருத்திக்காக ரூபா 300,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2019 நவம்பர் மாதம் வரை அபிவிருத்தி விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளை பயன்படுத்தி முன்பள்ளியை முறைப் பிரகாரம் நடாத்த வேண்டும். | குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |
| (ii) | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் படி செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 16,800,000 தொகைக்கான 38 செயற்திட்டங்களில் ரூபா 2,500,000 தொகைக்கான 06 செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. | கிடைத்திருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | செயற்படுத்தப்படாத திட்டங்களை 2020 ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| (iii) | உள்ளக மற்றும் உள்நாட்டு விவகார மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கிராமிய பிரதேசங்களில் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 20 பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக கிடைத்திருந்த ரூபா 17,301,525 ற்கான தொகையிலிருந்து கூட்டுத்தொகை ரூபா 4,294,925 தொகைக்கென 07 பாதை செயற்திட்டங்கள் செயற்படுத்த முடியாமலிருந்தது. | கிடைத்திருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | செயற்படுத்தப்படாத திட்டங்களை 2020 ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**கடையறைகள் வாடகைக்கு கொடுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான மாபலகம புதிய வர்த்தகக் கட்டடத் தொகுதியில் கடை ஒன்று மூடப்பட்டிருந்துடன், சபைக்குச் சொந்தமான வர்த்தக கட்டடத்தொகுதியின் 07 கடைகளில் வாடகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கும், கடையறைகளின் வாடகைகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேவையான தொடர் நடவடிக்கை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகைப் பதவிகளின் எண்ணிக்கை 22 ஆக இருந்தது. | அத்தியவசியமனா வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதுடன், மிகைகள் முறைப்படுத்தப்பட வேண்டும். | வெற்றிடப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு ஊழியர்கள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற / குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டின் போது ரூபா 44,457,110 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்தொழில் கட்டட வாராந்த சந்தை மற்றும் கழிவறை முறைமை என்பன 2016 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச மற்றும் தனியார் நிறுவனங்களை அறிவுறுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தன. | வாகனங்களை திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிகளை பெற்று திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்ட போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் இரண்டு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |